உ

சிவமயம்

# பசுவின் கதை



வெளியீடு:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை — அச்சகம்

யாழ்ப்பாணம்

**MAHIMA**

# Exercise Book

*NAME* ...........................................................

*SUBJECT* .......................................................

*CLASS* ...........................................................

*SCHOOL* ........................................................

**PAGES. 80** 148 x 210 m.m. - A 5 **PRICE 6.50**

MAHIMA INDUSTRIES
676, Waragoda Road, Sinharamulla -Kelaniya.

உ

சிவமயம்

# பசுவின் கதை

★

பசுக்காத்தல்

அடங்கியுள்ளது

★

ஸ்ரீ லங்கா புத்தகசாலை - அச்சகம்
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

# பசுவின் கதை

வெற்றிவேந்தன் விசாகசாலையான் என்று ஒரு இராஜா செங்கோன் முறைமையாக இராஜ்ஜியம் பண்ணி வருகின்ற காலத்திலே, உருத்திரபூமியிலே காராம்புலி நாட்டில் கங்கையாற்றின் தென்திசையிலுள்ள அக்கிராமத்திலே, நாநூறு ஐந்நூறு பட்டிப் பசுக்கள் உண்டு அந்தப் பசுக்களையெல்லாம் குடிதாங்கினான் என்கிற இடையன் கூலிக்கு மேய்த்து வருவான். அவன் அந்தப் பசுக்களுக்கு ஒரு நோய் நோக்காடு இல்லாமல் பேணிப் பராமரித்துப்புல்லுள்ள காடு தேடிக்கொண்டுபோய் மேய்த்துத் தண்ணீருள்ள இடந்தேடிக் கொண்டு அங்குசென்று தண்ணீர் குடிக்கச்செய்து கிடைகிடத்தி வருகின்ற காலத்திலே, மீனத்திலே சனிபகவான் புகுந்து மூன்று வருஷம் ஆறு மாதம் மழைபெய்யாது போய்விட்டது. அப்பொழுது பசுக்களெல்லாம் மிகவும் துன்பப்பட்டன. அதுகண்ட இடையன் மலைச்சாரலிலே காட்டுக்குள்ளே நுழைந்து புல்லும் தண்ணீரும் பார்க்க வருகிறபொழுது ஒரு மலைச்சாரலிலே புல்லும் தண்ணீரும் கண்டு வெகு சந்தோஷப்பட்டு அவ்விடத்திலே பசுக்களையெல்லாம் கொண்டுபோய் மேய்த்துக்கிடத்தி வந்தான். அங்ஙனம் வருகின்ற காலத்திலே ஒரு நாள் பசுக்களெல்லாம் மேயப்போயின. அப்பொழுது இடையனுக்குக் கண்தூக்கம்வந்தது. வர இடையன் பசுக்களையெல்லாம்

சாய்த்துக் கொண்டுபோய்த் தண்ணீர் குடிக்கப் பண்ணிக்கிடைகாட்டி, தான் பிடித்த தடியைப்புற்றின் பேரிலே யூன்றி அதன்மேல் நாடியைக் கொடுத்துக் கவிழ்ந்த தலையனாகத் துயின்றான்.

சிறிது நேரம் சென்ற பின்பு பசுக்களெல்லாங் கிடையாலே எழுந்து மேய்ந்தன. அப்பொழுது கபிலையென்கிற பசு தன் பசியினாலே மற்ற வைகளை விட்டுத்தூரத்தே சென்று மேய்ந்தது.

அங்ஙனம் மேயும்பொழுது அக்காட்டிலே முன் எட்டு நாளாக இரைகிடையாமல் பதுங்கிக்கிடந்த வேங்கைப்புலி பசுமேய்கின்ற ஆரவாரமும் மணிச் சத்தமுங்கேட்டுப் புறப்பட்டு ஒரு சுனையருகே வந்து பசுவைக்கண்டு, பரமேஸ்வரன் எனக்கு இன்றைக்கு நல்லபோசனம் கற்பித்தான் என்று நினைத்துப் பசு தண்ணீர் குடிக்கப் போகின்ற வழியிலே நின்று பசுவைப்பார்த்துப் புலி சொல்லும்

"வாராய் கபிலைப் பசுவே! நான் எட்டு நாளாக இரைகிடையாமல் கிடக்கின்ற தருணத்திலே நீ வந்து அகப்பட்டாய்" என்று வேங்கைப்புலி கூறப் பசு சொல்லும்: புலி அரசே! கேளும் நான் சாகிறதற்காக விசனப்பட்டு நிற்கவில்லை. நிலத்திலே யெழுந்த பூண்டு நிலத்திலே படியவேணும். எந்த விதத்திலே யானாலும் இறந்துபோவது நிச்சயம். நான் மெத்த நெடுங்காலமாக மலடிருந்து மனமுருகிக் குளிர்ந்த மரங்களெல்லாம் கோயிலென்று கும்பிட்டு தெய்வ சிவாலயங்களெல்லாம் சென்று வணங்கி, வேண்டிய தவம்பண்ணி ஒருசெங்கன்றை ஈன்று எடுத்தேன் அந்தக்கன்று புல்லுப்பிடித்து மேயவும் அறியாதது. நான் வருகின்றபோது ஊட்டங்கொடுத்துவிட்டு வந்தேனுமில்லை. இதனாலே மனம் துக்கப்படுகிறே னேயல்லாது வேறல்ல என்று சொல்லப் புலிகேட்டு

வெகுசந்தோஷப்பட்டு ஆகா! இந்தப் பசுவுக்கு இத்தனை அறிவைப்பார் என்றுதன் மனத்தில் எண்ணி புலிசொல்லும், பசுவே! இந்தநேரம் வந்து அகப்பட்ட உன்னைத் தப்பிப் போகவிட்டு நான் பசியுடனே இருப்பேனோ? ஆனால் உன்னை விட்டேனாகில் நீ போய் உன் கன்றுக்கு ஊட்டங் கொடுத்துத் திரும்பிவருகிறதற்கு அடையாளம் என்ன? என்று புலி கேட்கப் பசுசொல்லும்.

"கேளாய் மிருகேந்திரனே! இந்தப் பசி வேளை வந்து அகப்பட்ட என்னை இரக்கம் பார்த்து அனுப்பி வைப்பாயாயின் திருப்பி உனக்கு நான் இரையாக வருவேன்.

அங்ஙனம் வராதிருந்தால்:-

1. கங்கையாற்றங் கரையிலே காராம்பசுவைக் கொன்றவன்

2. தீர்த்தக் கரையிலே பிராமணனைக் கொன்றவன்

3. விளக்கேற்றி உண்ணாதவன்

4. விளக்கு அவிந்தபின் சாப்பிட்டவன்

5. செய்நன்றி மறந்தவன்

6. செய்யாதன செய்தவன்

7. கோள் சொல்லிக் குடிகெடுத்தவன்

8. அடைக்கலம் புகுந்தவனைக் கைநெகிழவிட்டவன்

9. மன்றுபறித்து உண்டவன்

10. வழக்கோரஞ் சொன்னவன்

11 தன்னைக் காப்பாற்றினோன்

12. சமரிலே பட்டுப்போகத் தன் உயிர் பிழைத்து மீண்டு ஓடிப்போனவன்

13. தனிவழிக்குத் துணை வருவேன் என்று பொய்ச் சதிகேடு பண்ணினவன்

14. இராசாக்களுக்குக் காரியம் பார்த்து ஊரைக் கெடுத்து வாழ்ந்தவன்

15. தன் தாரம்விட்டுப் பிறர்தாரம் விரும்பினவன்

16. அடுத்தாரைக் கெடுத்தவன்

17. அகதேசி பரதேசியை அலைவு செய்தவன்

18. கதவடைத்து உண்டவன்

19. போசனம் பண்ணும்போது பிச்சைக்கு வந்தவர்க்குப் பிச்சை கொடாதவன்

20 விருந்துக்கு வந்தவர் பசித்திருக்கத் தன் பசி தீர்த்துக் கொண்டவன்

21. பெற்ற தாயையும் பிதாவையும் பேணாதவன்

22. பிறருடைய வாழ்வைப் பார்த்துப் பேசாது பேசி பெருமூச்சு விட்டவன்

23. பெண்பேதையைப் பேதலிக்க வைத்தவன்

24. கூடப்பிறந்த சகோதரர்களைத் தள்ளிவைத்து வாழ்ந்தவன் கன்னியழிந்தவன்

25. கன்று தள்ளிக் கறந்தவன்

26. தெய்வாலயங்கள், தண்ணீர் பந்தல்கள், மலகூடங்கள் மடங்கள், தருமசாலைகள், அன்னசத்திரங்கள், இவைகளுக்கு மனவஞ்சமாக இரண்டகம் பண்ணி அழிவு தேடிக் கொடுத்தவன்

27. சிவன்பேரிலே நேசமில்லாதவன், திருநீறிடாதவன்

28. கடன் வாங்கிக் கொண்டு முறியைக் கொடாமற் கட்டிவைத்தவன்

29. அனியாயப் பொலிசை வாங்கினவன்
30. பதர் கலந்து விற்றவன்
31. சிறு மரங்கால் வைத்து அளந்தவன்
32. மாதாவையும், பிதாவையும், குருவையும், பெரியோரையும், கற்புள்ள மங்கையரையும், பேணி நடவாமல் பேசாது பேசினவன்
33. கூலி பொருந்தி வேலை செய்தபின் கூலி கொடாதவன்
34. பெற்ற பிள்ளையைப் பேதலிக்கவைத்துத் தான் வாழ்ந்தவன்
35. வழிதிருத்தி நடவாதவன்
36. குருவின் தேவியையும், தமையன் தேவியையும் இராசாவின் தேவியையும் கவர்பவன்
37. வழியிலே கிடக்கின்ற கல் முள் எடாமல் பெருமை பண்ணினவன்
38. துயருற்ற வேளைக்கு உதவி பண்ணி நடவாதவன்
39. அயலார் தவிக்க வாழ்ந்தவன்
40. இடுக்கண்வழியில் பயமுறுத்தினவன்
41. ஊரை முனிந்து கொடுமை பண்ணினவன்
42. உறங்கிக் கிடக்கும் பொழுது கொன்றவன்.
43. வழக்குஇல்லாவழக்கை வளர்த்துக்கொடுத்தவன்
44. பறக்கிற பக்ஷியைக் கொன்றவன்
45. பஞ்சமா பாதகங்களைச் செய்தவன்
46. பழங்கதையைப் பொய்யென்று சொன்னவன்
47. பஞ்சாட்சரசெபம் பண்ணாதவன்
48. சிவன் முதலான தெய்வங்களை நினையாதவன்
49. பொய்ச் சாட்சி சொன்னவன்
50. புராண காவியங்களைப் பழித்தவன்

51. நிழல் மரங்களை யழித்தவன்
52. விடியுமுதலெழும்பிகால் கை சுத்திபண்ணாதவன்
53. சுத்திசெய்து தோத்திரம் பண்ணாதவன்
54. காட்டிலுள்ள மிருகங்களைக் கொன்றவன்
55. களவு செய்தவன்
56. கண்ணிலேகாணாதகடும்பொய்யைச்சொன்னவன்
57. பெற்ற பிதாவுடனே எதிர் உத்தரம் பேசினவன்
58. அடிமையைக் கொடுமை பண்ணினவன்
59. அந்தி சந்தி ஆதித்தனைத் தொழாதவன்
60. சாதிமார்க்கந் தவறினவன்
61 தான் கொடுத்தவற்றைத்தன்வாயாலேசொல்லிப் பேசினவன்
62. சிவனுக்குத் துரோகம் பண்ணினவன்
63. குழந்தைப் பிள்ளைகளையும், பெண் ஜனங்களையும் கொன்றவன்
64. மணிவேட்டை ஆடினவன்
65. மைந்தன் மனைவியை விற்றவன்
66. தான் செய்த தருமத்தை விலைபேசி விற்றவன்
67. வேதப்பொருளை விலைபேசி விற்றவன்
68. வித்தை கற்பித்த குருவுக்கு இரண்டகம் பண்ணினவன்
69. சிவனடியார் பொருளைத் திருடினவன்
70. தண்ணீர் குடிக்க வந்த பசுவைத் தண்ணீர் குடிக்க விடாமல் துரத்தினவன்

இப்படி இன்னும்மின்னும் அநேக பெரிய பாவங்களைச் செய்தவன் போகின்ற நரகத்திலே நானும் போவேன், என்று பசு சொல்லப் புலி கேட்டு வெகு

சந்தோஷப்பட்டு, இந்தப் பசுவுக்கு இவ்வளவு அறிவு ஏது என்று தன் மனதில் நினைத்துப் பின் கூறும்.

"வாராய் பசுவே! நீ போய் உன் கன்றுக்கு ஊட்டங் கொடுத்துத் திருப்பி வருமளவும் வழிபார்த்திருக்கிறேன்" என்று புலி சொல்லப் பசு சந்தோஷப்பட்டு "மிருகேந்திரனே சற்று நேரத்துக்குள்ளாக உனது பசி தணிக்க வருகின்றேன்" என்று சொல்லி தன் கன்றைத்தேடி வந்தது. வரும் பொழுது மலையிலே வாழும் ஒரு பெரும் பாம்பு முன் எட்டு நாளாக இரைகிடையாமல் பசு வருகிற வழியிலே ஒரு மரத்துடனே சார்ந்து அயர்ந்து கிடந்தது. பசு அதைப் பாம்பு என்று அறியாமல் மரம் என்று நினைத்து சாய்ந்தது தன் தினவு தீர உராய்சுகின்றபோது பாம்பு இன்றைக்கு நமக்கு நல்ல இரை வந்தது என்று நினைத்துப் பசுவைப் பிடிக்க, அந்நேரம் பசு "அரகரா! சிவனே" என்று மெத்த விசனப்பட்டு வெகு துன்பத்துடனே நின்றது. அப்போது பெரும்பாம்பு பசுவின் முகத்தை ஏற இறங்கப் பார்த்து, "என்பசிக்கு நல்ல இரை வந்தது" என்று வெகு சந்தோஷமாகப் பிடிக்க "நீ மனத்துக்கப்பட்டு நின்றது என்ன' என்று கேட்கப் பசு சொல்லும்.

கேளாய் நாகராஜாவே! நான் மலடு நின்று மனமுருகித் தவம் பண்ணி ஒரு சேங்கன்றை ஈன்றேன்: அது புல்லுப் பிடித்து மேயவும் அறியாதது, நான் வருகிறபோது ஊட்டங் கொடுத்து வந்தேனுமில்லை: என் வயிற்றின் மிகுந்த பசியினாலே வெகு தூரம் போய் மேய்ந்தேன். மேயும்பொழுது ஒரு புலியின் வாயிலே அகப்பட்டேன்: அந்தப்புலியும் முன் எட்டுநாளாக இரை கிடையாமல் கிடந்தது; நான் புத்திர சோகத்தால் துன்பப்படுகிறது கண்டு என்மீது இரங்கி, நீ போய் உன் கன்றுக்கு ஊட்டங்கொடுத்து வா என்று புலி சொல்ல அதனிடம்விடை பெற்று வருகின்றபோது

உன் கையில் வந்து அகப்பட்டேன். நாகராஜாவே! நீ கார்க்கோடான், சங்கபாலகன், தக்கன் முதலிய அட்டமா நாகங்களிலும் பெரியவன் காளியினுடனே திருநடனமாடுகிறபோது உன்னை ஆபரணமாகப் புனைந்ததுமன்றி ஆதி மூலமாகிய ஸ்ரீ நாராயணமூர்த்தி திருப்பாற்கடலிலே மந்தர பர்வதத்தை மத்தாக நாட்டி அதனை இழுத்துக்கடையும்கயிறாகப்பூட்டிய வாசுகியின் வங்கிஷத்திலேயும் பிறந்த புண்ணியவான்; தேவரீர் என்னுடைய புத்திரசோகத்தால் நான் மயங்கி நிற்கின்ற துன்பத்தைப் பார்த்தாலும் நல்லது, அல்லது யான் புலிக்குச் செய்தசத்தியத்தை நினைத்தாலும் நல்லது'' என்று பசு சொல்ல பாம்பு கேட்டு "இந்தப் பசுவுக்கு இத்தனை அறிவைப்பார் அது எங்கள் பிறப்பு வளர்ப்பு எல்லாம் எடுத்துச் சொல்கிறது; அதுவுமன்றித் தன்னுடைய கன்றை நினைத்து இரங்குகின்றது; அதுவுமன்றிப் புலிக்குச் சத்தியம் பண்ணிக்கொடுத்த தோஷத்தைப்பற்றி விசனப்படுகிறது இப்படி அறிவுள்ள பசுவைப் புசித்தோமானால் நரகத்துக்கு ஏதுவாய் போகின்றதேயல்லாது வேறு அல்ல'' என்று மனதிலே நினைத்துப் பின்கூறும்;

"பசுவே! எனக்கு சுவாமி இன்னும் ஒரு உணவு தருவார் நீ போ'' என்று பாம்பு சொல்லப் பசுவும் விடை பெற்றுக்கொண்டு கன்றைத் தேடி வந்தது. வரும்போது கன்று தாயைக் கண்டு சந்தோஷப்பட்டு வெடி வாலெடுத்தோடி வந்தது, அப்பொழுது பசுவானது கன்றை முகந்து நக்கி அதனையணைத்து ஊட்டங் கொடுத்து நின்றது. அப்பொழுது கன்று முலை குடியாமல் தாய்முகத்தைப் பார்த்து "இன்றைக்கு உன் மேனியெல்லாம் உதிரம் ஓடுகிறாப்போல வந்தது என்ன? என்றுகேட்கப் பசு சொல்லும்;

"என் அரசனே! நான் இன்றைக்கு என் வயிற்றுப் பசியினாலே வெகுதூரம் போய் ஒரு மலைச்சாரலுக்குள்ளே நுழைந்து புல் மேய்கின்றபோது, என் சரீரமெல்லாம் முள்ளு கிழித்ததேயல்லாமல் வேறு ஒரு வியாகூலமுமில்லை', என்று பசு சொல்லக் கன்று கேட்டு, உன் பேர்லே முள்ளு கிழித்ததேயல்லாமல் வேறொரு வியாகூலமுமில்லையென்று என் தலையிலே தொட்டுச் சத்தியம் பண்ணினாலொழிய, முலைகுடியேன். என்று சொல்லப் பசுகேட்டு மெத்த விசனப்பட்டுக் கண்கலங்கி இப்படி அறிவுள்ள கன்றை வளர்க்க யான் பாக்கியம் பெற்றேனில்லை; ஆனால் பூர்வ கட்டளையைவிலக்க யாராலே முடியும் என்று தன் மனதிலே எண்ணி, "என் அரசே நானும் மிகுந்த பசியினாலே ஒரு புல்லுள்ள காடுதேடி ஒரு மலைச்சாரலிலே போய் மேய்ந்தேன். அப்பொழுது எட்டுநாளாக இரை கிடையாமல் கிடக்கின்ற புலியின் வாயில் அகப்பட்டேன். அந்தப்புலி என்னைக் கொன்று தின்னப்போகின்ற சமயத்தில், நானும் உன்னை நினைத்துக் கண்கலங்கி நின்றேன் அந்தப்புலி என் இரக்கத்தைப்பார்த்து உன் கன்றுக்கு ஊட்டங்கொடுத்துத் திரும்பி எனது பசிக்கு இரையாக வா என்று சொல்லிவிட, நானும் அநேகமான சத்தியம் பண்ணிக் கொடுத்துவந்தேன்; அந்தப் புலி பசியுடனே வழிபார்த்திருக்கும் 'நான்போகவேண்டும்; உன் பசிக்கு நீயும் முலைகுடி என்று பசு செல்லி இரங்க கன்று சொல்லும்:

"என்னை அருந்தவமிருந்து பெற்ற அன்னையே! உன்னைப் புலிக்கு இரையாகப் போகச்சொல்லி, இன்றைக்கு உன் முலைபால் குடித்தால் நாளைக்கு யார்முலை குடிக்கப்போகின்றேன் உன்னைத் தின்னுகிற புலி என்னைத்தின்னாதோ? நானும் உன்னுடன் கூட வருகின்றேன்" என்று தாய்க்கு முன்னே ஓடியது

அப்போது பசுவும் மெத்த விசனப்பட்டு, பின் கன்றை நோக்கி, என் அரசே! சொற்சோர்வு படுதல் கூடாது; வார்த்தை தப்பினால் என்னைப் புண்ணிய மிருகம் என்று சொன்னவர்கள் அதை மறுத் துஷ்ட மிருகம் என்று சொல்வார்கள். உன்னைக் குடிதாங்கி னான் என்கிற இடையன் தாயில்லாக் கன்று என்று நன்றாக வளர்த்துக்கொள்வான் இந்நேரத்துக்கு நீ உன் பசிக்கு முலைகுடித்து நம்முடைய சாதியாருட னே கூடி மேய்ந்து கொண்டு சுகமாக இருப்பாயாக" என்று மீண்டும் நல்ல புத்திகள் சொல்லும்

**கேளாய் என் அரசே!**

1. உன்னிலும் பெரிய மாட்டுடனே சண்டையிட்டுக்கொள்ளாதே
2. ஊர் காலியுடனே கூடி மேயாதே
3. உலரவைத்த புழுங்கலைத் தின்னாதே
4. சிறுகயிற்றில் கட்டிவைத்தால் கயிற்றை அறுக்காதே
5. ஆழமான நீரில் இறங்காதே
6. வேலிமுறித்துப் பயிரை அழிக்காதே
7. கல்லிலே மரத்திலே ஏறியிறங்காதே
8. தீவினைக்குள்ளாரோடு கூடித் திரியாதே
9. காற்றுக்கு எதிரே கிடவாதே
10. கடுந்தரையைக் காலால் சீயாதே
11. கட்டவந்தபேரைச் சீறாதே
12. செடியுள்ளகாட்டிலே தனியே போய் மேயாதே
13. மழையிலே நனையாதே
14. மாரியடைத்தால் வயிற்றுப் பசியினால் பயிரைத் தின்னாதே
15. மற்றுந் தீவினைகளுள்ளதெல்லாஞ் செய்யாதே
16. செப்பமுடன் உன் சாதியாருடனே மேய்ந்துகொண்டு சுக மாய் வாழ்வாயாக என்று பசுச் சொல்லக் கன்று கேட்டு மறு வசனம் பசுவுக்குச் சொல்லும்

"என் அம்மே! உன் உயிர் போகின்ற இடத்தில் என் உயிர் போனாலாகாதோ? நானுங்கூட வருகின்றேன்'' என்று தாய்க்கும் முன்னே ஓடிப் போகப் பசு தன் கன்றைச் சாதியாரிடத்துக் கூட்டிப்போய் விட்டு "உறவின் முறையான சாதியாரே! நானும் என் வயிற்றுப் பசியினாலே உங்களை விட்டுத் தூரத்திலே போய் மேயும் பொழுது, ஒரு புலியின் வாயில் அகப்பட்டேன்; அந்தப்புலிக்கு நான் போய் என் கன்றுக்கு ஊட்டங் கொடுத்து உன் பசிக்கு சீக்கிரம் இரையாக வருகின்றேன் என்று சத்தியம் பண்ணிக் கொடுத்து வந்தேன். அந்தப் புலி பசியினால் வருந்தி வழி பார்த்திருக்கும்; நான் போகிறேன்; நீங்கள் என்னுடைய கன்றை உங்கள் கன்று போல் வளர்த்துக்கொள்ளுங்கள் நானும் அதனை உங்களுக்கு அடைக்கலமாக வைத்துப்போகின்றேன்'' என்று தன் சாதியருடனே வேண்டிய புத்திகளுஞ் சொல்லிக் கன்றை அடைக்கலமாக வைத்துப் பின் போக விடை கேட்கச் சாதியிலுள்ள பசுக்களெல்லாம் கூடி விசனப்பட்டு "பசுவே! நம்முடைய சாதியார் புலியின் வாயிலே அகப்பட்டுத் தப்பிவந்த பேர்களுமில்லை. தப்பிவந்த போதே உயிர் பிழைக்க சத்தியம் பண்ணிக் கொடுத்தாலும் தோசமில்லை; போக வேண்டாம் என்று வேண்டிய பல நியாயங்களையும் எடுத்துச்சொல்லி கன்றையும் அனுப்பி விட்டுப் புலி இருக்கிற தலத்திலேயே சென்று "மிருகேந்திரனே! நான் போய்வர வெகுநேரஞ் சென்றது, இந் நேரமட்டும் பசியுடனே இருந்தீரே; இனி வந்து பசியாறும் என்று பசுச் சொல்ல புலி கேட்டுப் பசுவைப் பார்த்து வெகு சந்தோசப்பட்டு, "பசுவே! வார்த்தை தப்பாமல் நீ வந்த போதே என்னுடைய பசி தீர்ந்து வயிறு பரிபூரணமாய்ப் போயிற்று. இனி பசுவே! நீ போய் உன் கன்றுக்கு ஊட்டங்கொடுத்து அதனை வளர்த்து

கொண்டு சுகமாக இருப்பாயாக,, என்று சொல்லப் பசு சொல்லும்;

"கேளாய் மிருகேந்திரனே! நீ என்னுடைய இரக்சந்தைப் பார்த்துஎன்னைப் போகவிட்டுப்பசியுடனே இருந்தால் நான் போகின்றதில்லை. அஃது ஏன் என்றால் புலி பசித்தது என்று புல்லைத் தின்கிறதில்லை; எத்தனைவிதப் பசித்துன்பமுண்டானாலும் மாமிசம் புசிப்பதல்லாமல் வேறொருபுசிப்பைப் புசிப்பதில்லை; இப்புசிப்பைத் தப்பவிட்டால் வேறு ஒரு புசிப்பு இந் நேரம் கிடையாது" என்று பசு சொல்ல, புலி கேட்டுப் பசுவே! நீ எத்தனைவகையினாலேயும் எடுத்துப்பேசினாலும் உன்னைக் கண்டபோதே பசியெல்லாம் தீர்ந்து வயிறு பூரணமாய்ப் போனது நீ வேறு ஒரு மிருகத்துக்கும் அகப்படாமல் சந்தோஷத்துடனே உன் கன்றையும் வளர்த்துக்கொண்டு சுகமாயிருப்பாயாக" என்று புலி சொல்லப் பசு சொல்லும்

"புலியே! கேள். நான் இத்தனை சத்தியம் பண்ணிக் கொடுத்த தோஷத்தினால் நரகத்துக்கு ஏதுவாய்ப் போவேன்; இத்தலத்திலேயே கிடந்துஇறந்துபோவதேயல்லாமல் வேறு ஒரு இடத்துக்குச் செல்வதில்லை என்று பசுச்சொல்ல, புலிகேட்டுப் "பசுவே! நீ எனக்குக் குருவாகவும், நான் உனக்கு ஒரு சிஷ்யனாகவும் இருப்பேன் நீ எனக்குப் பாவத்தைப் பற்றியும் நரக துன்பத்தைப் பற்றியும் சொல்லவேண்டும்' என்றுவணக்கம் புரிந்து வாய் புதைத்து நின்று கேட்கப் பசுச் சொல்லும்

கேளாய் மிருகேந்திரனே பூமியில் மானிட ஜென்மமெடுத்துப் பிறந்தவர்கள் அதிகாலையிலெழுந்துகால் கை சுத்தி பண்ணி சிவன் முதலான தெய்வங்களைத் தம்மால் இயன்ற பூசை செய்து தோத்திரம் பண்ணல் வேண்டும் நந்தவனங்களை வைத்துப், மாடகூடங்

களைத் தெய்வங்களுறையச் செய்துகொடுத்தும் தண்ணீர்பந்தல்வைத்தும்இல்லாதாருக்குத் தன்னால் இயன்றபடி பிச்சை கொடுத்துப், மாதா பிதாவைப் போற்றுதல் பண்ணி நடந்தும் வரவேண்டும். குரு சொன்ன வாசகந்தவறாமல் நடக்கவேண்டும் இப்படிச் செய்து வருவோர்களுக்கு அவர்கள் பூமி யிலே இருக்கிற காலமெல்லாம் துன்பம் இல்லாமல் இன்பத்துடனே நல்ல பாக்கியங்களை அனுபவித்து வருவார்கள். இறுதி வந்த காலம் பிரமா விஷ்ணுப் ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் தேவேந்திரனும் பிரசன்ன மாய் பதினெட்டு வாத்தியமும் முழங்க வந்து வெளிப் பட்டு புட்ப விமானத்தில் ஏற்றிப் புட்பமாரி சொரிய ஜெய ஜெய என்று போற்றிப் பொன்னுலகத்துக்குக் கொண்டு செல்வார்கள்; அங்கே அவர்கள் பொன்னி னாலே வேய்ந்து வெள்ளியினாலே உப்பரிகை கட்டிச் சல்லிசவரந் தூக்கிய அலங்கார மண்டபத்திலே தவள சந்திரக்குடை பிடிக்க, வெண்சாமரை வீசக் காளாஞ்சி யேந்தக் கின்னரர் தும்புருநாதர் பாடத் தேவரம் பையர் ஆடல் பாடல் செய்யச் சிங்காசத்திலே இருந்து இராச்சிய பரிபாலனம் பண்ணிப் பேரின்பத்தை அனுபவித்து இருப்பார்கள்.

பெண்ணாகப் பிறந்தவர்கள் அதிகாலையி லெழுந்து வீடு வாசல் பெருக்கிச் சாணம் தெளித்துச் சட்டிபானை கழுவிவைத்து, அட்டில் பொலிய அடுப் பிலே நெருப்பு இடுதல் வேண்டும். புறங்காலிலே மகாலட்சுமி இருப்பாளென்று அறிந்து கால் முகங் கழுவிச் சுத்தி பண்ணித் திருநீறு சாத்தித் தன் பர்த் தாவைத் தொழுதல் வேண்டும். தன்னுடைய பர்த்தா வைத் தெய்வமென்று தொழும் பெண்களுக்கு எல்லா அனுக்கிரகமும் உண்டாகும். மனையில் உண்டான

வேலைகள் எல்லாஞ் செய்து பிச்சைக்கு வந்த பேர்க்கு பிச்சை கொடுத்துப் பசித்தவர்களுக்குப் பசியாற்றிப் பல பல புண்ணியங்களையும் தம்மால் இயன்றபடி செய்து கற்புநெறி தவறாமல் ஒழுகல் வேண்டும். அங்ஙனம் நடந்தவர்கள் பூமியிலிருக்கிற காலமெல்லாம் பாக்கியத்தை அனுபவித்து மரணிக்கிற காலம் புட்பவிமானத் தேரில் ஏறிச் சிவலோகத்திலே போய்ச் சேர்ந்து, தேவ கன்னியர் பரிசை பண்ணத்தக்கதாக நல்ல சுகத்துடனே போக போக்கியங்களை அனுபவித்து பார்வதி அம்மையுடனே சிங்காசனத்திலே வீற்றிருப்பார்கள்.

இனி மிருகேந்திரனே! நகரத்தின் வரலாறு சொல்லக்கேள் என்று பசுச் சொல்லும் :-

1. பூமியிலே பிறந்து பாவங்களைச் செய்து அறநெறி வழுவிய பெர்களை யமதூதர்கள் பிடித்துவந்து செக்கிலே போட்டுத் திரிப்பார்கள்
2. தூண்டிலே போட்டு வதைப்பார்கள்
3. இரும்புத் தூணை நெருப்பெனக் காய்ச்சி தழுவச்சொல்லிக் குறடுகாய்ச்சிப் பிடுங்குவார்கள்
4. செப்பு நராசங் காய்ச்சி செவியில் ஊற்றுவார்கள்
5. பெருயிறு பின்னும் முன்னும் அடைந்திருக்கவைப்பார்கள்
6. வெண்குண்டம் கருங்குண்டம் பற்றியெரிக்க வைப்பார்கள்
7. நாயும், நரியும்; முதலையும், பாம்பும் பிடுங்கப் போடுவார்கள்
8. கையிலும் காலிலும் பந்தங்களைக் கட்டி எரிப்பார்கள்
9. நாக்கிலே பாம்பைக் கடித்துத் தூங்கவைப்பார்கள்
10. தூணிலே கயிற்றாற் கட்டி முறையோ முறையோவென்று கூக்குரல் வைத்துக் கூ கூ என்று பதைக்க அடிப்பார்கள்
11. செடிக்கிணற்றிலே தள்ளிவிடுவார்கள்
12. எண்ணெயைக் கொதிக்கக் காய்ச்சி அதற்குள் போடுவார்கள்
13. வயிற்றுக்குள்ளே மலப்புழுவை நிறையவிட்டு அடைப்பார்கள்
14. முகத்திலும் கண்ணிலும், மூக்கிலும் மூளையை வைத்து அறைவார்கள்
15. நகக்கண்ணுக்குள்ளே ஊசியை ஏற்றுவார்கள்
16. வாயின் எலும்பையும் சந்துகளின் எலும்பையும் குறடு காய்ச்சி வந்து பிடுங்குவார்கள்

17. வாயிலே செம்பு உருக்கி வார்ப்பார்கள்
18 முள்ளுக்கட்டையை நெஞ்சிலே வைத்து அறைவார்கள்
19. எண்ணெயிலே கருகப் பொரித்துப் பட்சிகள் கொத்திப் பிடுங்கித்தின்னப் போடுவார்கள்
20. தலைகீழாகத் தூக்கிக்காலிலே கயிற்றைக்கட்டி ஆஞ்சானிலே தூக்குவார்கள்
21. மலமும் சலமும் கரைத்துக் குடிக்கும்படி பருக்குவார்கள்
22. புகை வீட்டுக்கு உள்ளே விட்டுக் கதவை அடைத்துப் பூட்டுவார்கள்
23. மலத்திலே குளிக்கச்செய்து வெய்யிலிலே காயப்போடுவார்கள்
24. கீழும் மேலும் நெருப்பு எரிய இரும்பு உலக்கையிலே கிடத்துவார்கள்
25. கிட்டி கட்டி நெக்குவார்கள்
26. இரும்பினாலே செய்த உண்டையைக் கயிற்றிலே கோர்த்துக் கோசத்திலே தூக்குவார்கள்
27. இருப்பு உலக்கையை நெருப்பெனக் காய்ச்சிப் பூவிலும் மெல்லிய யோனியிலே ஏற்றுவார்கள்
28. கையிலும் காலிலும் கயிற்றினாலே கட்டி வரிவார்கள்
29. நாசியிலே நச்சுப் புகையை விடுவார்கள்; நரி, நாய் இவைகளின் இறைச்சியைப் பச்சையாய்த் தின்னச்சொல்லி அடிப்பார்கள்
30. குறளை வியாதி அதிகரிக்கவைப்பார்கள் காற்றிலும் மழையிலும் வெய்யிலிலும்பனியிலும்கட்டிஉருட்டிப்போடுவார்கள்
31. புழுவைச் சேர்த்து இரத்தத்தைத் தண்ணீரென்று சொல்லிப் பருக்குவார்கள்
32. தீச்சட்டிக்குள்ளே விட்டு அடைத்துப்போடுவார்கள்
33. அவயவங்களைக் கொய்து போடுவார்கள்

இப்படியே பல பாவத்தின்படிக்குச் சற்றும் தவறாமல் இரக்கமில்லாமல் ஆக்கினை பண்ணுவார்கள் என்று பசு சொல்லப், புலிகேட்டுப் பேரின்பம் வந்து கண்ணிலே அருவி சொரிய அழுது உரோமஞ் சிலிர்த்து வலம் வந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து வாய்புதைத்து நின்று "பசுவே! நீ எழுந்தருளிச் சென்று உன் சாதியாருடனே கூடி உன்

கன்றையும் வளர்த்துக்கொண்டு சுகமாயிருப்பாயாக; அடியேனும் இன்று முதலாக இனி ஒரு ஆத்துமாவைக் கொல்வதுமில்லை, தின்னுவதுமில்லை'' என்று புலி சொல்லப் பசுச் சொல்லும்:

புலியே! நான் இவ்விடத்திலே உன்னுடனே கூட இறந்துபோவதேயல்லாது அப்புறம் போவதில்லை; இது நிச்சயம் என்று பசுச் சொல்லப் புலி கேட்டு, பசுவே! இவ்வளவு காலமெல்லாம் அநேக ஆத்துமாக்களைக் கொன்று தின்ற தோஷத்துக்கு என்ன செய்வேன் என்று என் இருதயம் மெத்தப் பதைக்கிறது. இனி நீர் சுகமாக இரும் என்று மறுபடியும் தொழுதுதெண்டம் பண்ணிச் சொல்ல, அதற்குப் பசுச் சொல்லும்; எனக்காக நீ இரை எடாமல் பசியுடனே இருக்கிறதற்குக்காரியம் ஏதோ என்று பசுச் சொல்ல, புலிகேட்டு வாய் புதைந்து தெண்டம் பண்ணி நீர் எழுந்தருளுமென்று மன்றாடிச் சொல்லப் பசு நான் போகிறதில்லையென்று சொல்ல, இப்படி ஒன்றோடொன்று தர்க்கம் பண்ணியிருக்கிற சங்கதியை ஆதி பரமேஸ்வரன் திருவுள்ளத்திலே அறிந்து, தமது பாகத்திலேயிருக்கிற பார்வதியம்மையோடு கூட இடபத்திலே ஏறிக்கொண்டு நாவலம் பெருந்தீவிலே ஒரு புலி இரை எடாமல் கிடக்கின்றது. இந்தப் புதுமையை நாங்கள் கண்டதில்லை நாங்கள் இரு பேரும் பசுவுக்கும் புலிக்கும் காட்சி கொடுக்க வேண்டும் என்று பேசிக்கொண்டு பசுவும் புலியும் இருந்த துறையருகே வந்து, பசு அறியாதபடி புலிக்கு வெளிப்பட்டுக் காட்சி கொடுத்து 'புலியே! பெருந்தவத்தை வேண்டித்தானே இங்ஙனம் இருந்தாய்; இனிக் கைலாயத்திலே எங்களுடனே கூடியெழுந்தருளிச் சுகமாக இருப்பாயாக, என்று பரமேஸ்வரனும் பார்வதியம்மையும் சொல்லப் புலி கேட்டு மறுமொழி சொல்லும்: அரகரா! சிவனே! சர்வத்துக்கும் வல்ல

தம்பிரானே! கனம் சண்டாளப் பிறப்பாய்க் கிடந்த எனக்கு இத்தனை அறிவையுண்டாக்கிய பசு இங்கே இருக்கத் தேவரீருடனே நான் கூட வந்து, கைலாயத்திலே இருந்து சுகத்தை அனுபவித்தால் என் அறிவினால் என்ன பயன்? அப்படி அனுபவிக்கிற காலத்தில் இத்தனை உபதேசம் பண்ணின குருவாகிய பசுவினுடன் கூட வருகிறதேயல்லாமல் தனியே நான் வருகிறதில்லை என்று புலிசொல்லப் பரமேஸ்வரனும் பார்வதியம்மையும் வெகு சந்தோஷப்பட்டு, பசுவுக்குக் காட்சி கொடுத்துப் புலியையும் பசுவையும் புட்பவிமானத் தேரிலே ஏற்றிப் பதினெட்டு வாத்தியம் முழங்கத் தேவர்கள் 'செயசெய' என்று போற்ற. தேவ அரம்பையர் நடனமாட பிரமா விஷ்ணு முதலிய பெரியோரும், தேவேந்திரனும் வாழ்த்தி ஆசி கூற, கைலாயத்துக்குக் கொண்டுசென்று எல்லையில்லாத பேரின்பத்தை அனுபவிக்குமாறு அனுக்கிரகஞ் செய்தார்கள். மிருகங்களைக் கொன்று தின்கிற அறிவில் குறைந்த பிறப்பாகிய புலி பசுவின் நல் உபதேசத்தினாலே கொலைபாவத்தினின்று நீங்கிப் பேரின்பத்தை அடைந்தது. உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனைப் புசியாதவர்கள் யாவரேயாயினுமாகுக, அவர்கள் கடைசியில் முத்தியை அடைவார்களென்பது திண்ணம்.

இக்கதையை விருப்பத்துடனே படித்தவர்களும் கேட்டவர்களும் இம்மையிலே பதினாறுபேறும் பெற்றுச் சுகத்துடனே வாழ்ந்து மறுமையிலே கைலாயத்திலே பரமேஸ்வரன் அருகே வீற்றிருப்பார்கள். 'இக்கதையைக் கேட்டாலும் படித்தாலும் இது எழுதிய புத்தகத்தை வீட்டில் வைத்திருந்தாலும் மாடு ஆடு பெருகிப் பாலும் பண்ணையும் உண்டாகிப் பசுக்களுக்கு நோய் முதலியன வராமல் தழைத்து ஓங்கும்' எனப் பரமேஸ்வரன் ஈஸ்வரிக்கு கூறியருளினார்.